2015 மார்ச் 30]

79—

தென்னை சார்ந்த தொழிற்சாலை

***20110—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் தென்னை சார்ந்த தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தொழிற்சாலை அமைக்க முன்வருவார்களேயானால், அவர்களுக்குத் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25 விழுக்காடு மானியம், வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 25 விழுக்காடு மானியம், தொழில்ரீதியாக பின்தங்கிய பகுதிகளுக்கான 25 விழுக்காடு முதலீட்டு மானியம், 20 விழுக்காடு குறைந்த அழுத்த மின் மானியம், மதிப்புக் கூட்டு வரிக்கு ஈடான மானியம், மின்னாக்கி மானியம், கயிறு வாரியத்தின்மூலம் ரிமோட் (REMOT) திட்டத்தின்கீழ் 40 விழுக்காடு மானியம் என 7 வகையான மானியங்கள் அரசால் வழங்கப்படுகின்றன. தொழில்முனைவோர்கள் தஞ்சாவூர் மாவட்டத் தொழில் மையத்தை அணுகி, மேற்கண்ட மானியங்களைப் பெற்று பயன் பெறலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.*

[2015 மார்ச் 30

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில், தனியார் உதவியுடன் தென்னை சார்ந்த தொழில் முகமை (Industrial Cluster) அமைக்க அரசு ஆவன செய்யும் என்று உறுதியளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அருப்புக்கோட்டையிலிருந்து புலம்பெயர்ந்த ஏழை நெசவாளப் பெருமக்கள் விருதுநகர் ஒன்றியம், சங்கரலிங்காபுரத்தில், பட்டாசுத் தொழிலின் முக்கியமான, ஆபத்தான அங்கமான கருந்திரி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்கள். சுமார் 1,200 குடும்பங்களின் வாழ்வாதாரமாக உள்ள கருந்திரி உற்பத்தியைப் பாதுகாப்பான முறையில், அரசின் வழிகாட்டுதல்களோடு நடத்திட, இந்தத் தொழிலாளர்களுக்காக தொழிற் கூட்டுறவுச் சங்கம் (Industrial Co-operative Society) அமைத்திட மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி பகுதியில் கருந்திரி உற்பத்தித் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அத்தொழிலுக்கென்று, தனியாக கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டுகோள் வைத்திருக்கின்றார்கள். ஏழுக்கு மேற்பட்ட நபர்கள் முன்வருவார்களேயானால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதல்களோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்நல்லரசு அந்தச் சங்கத்தை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.